**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண். 15/2024

பெயர்:–மகாதேவன் நாள்: 25.11.2025

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ரயில்வேயில் பணிசெய்து ஓய்வு பெற்றுவிட்டேன். என் தாத்தா பெயர் கருப்பண கவுண்டர் என்றால் சரிதான். அவருக்கு பூசாகவுண்டன், சுப்பையன் என்ற இரண்டு வாரிசுகள் என்றால் சரிதான். என்னுடைய அம்மா நல்லம்மாள் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். எளையம்மாள் எப்போது இறந்தார் என்றால் 2012ம் வருடமாக இருக்கலாம். சரியாக தெரியவில்லை. எளையம்மாளின் வாரிசுகள் 5 முதல் 7 பிரதிவாதிகள் என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்து 02.02.1951ல் கருப்பண கவுண்டர் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். தாவா 1வதுஅயிட்ட சொத்தை பொறுத்து 24.08.1987ல் பூசாகவுண்டரும், அவரது சகோதரர் சுப்பையனும் பாகபிரிவினை செய்து கொண்டு Aஷெட்யூல் சொத்து பூசாகவுண்டருக்கும், B ஷெட்யூல் சொத்து சுப்பையனுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.11.25 15:39:47 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |